Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 30 வியாழக்கிழமை (16-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 304

# கொழும்பின் கேந்திர பகுதியில் நேற்று பாரிய குண்டுவெடிப்பு

## உலக வர்த்தக மையம் ஹோட்டல்கள் சேதம்

கொழும்பு, ஒக்ரோபர் 16

கொழும்பு, கோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை 7.10க்கு இடம் பெற்ற பாரிய குண்டு வெடிப்பினால் உலக வர்த்தக மையம், கலதாரி, ஹில்டன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் பலத்த சேதம் அடைந்தன. இவற்றுக்கு சமீபமாக இருந்த ஜனாதிபதி செயலகத்துக்கும் சேதம் ஏற்பட்டது.

இந்தக்குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 17 பேர் உயிரிழந்ததாக இலங்கை அரசாங்கத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. எனினும் ஏனைய வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் தகவலின்படி 27க்கும் மேற்பட்டோர் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வெடிமருந்து ஏற்றப்பட்ட லொறி ஒன்றே இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக வர்த்தக மையத்துக்குப் பின் பகுதியில் அமைந்துள்ள கலதாரி ஹோட்டலின் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகிலேயே குண்டு வெடித்தது.

வேகமாக ஓட்டி வரப்பட்ட லொறி உலக வர்த்தக மையக் கட்டடத்தின் பின் பகுதியை நோக்கி வந்ததாகவும்—

(7 ஆம் பக்கம் பார்க்க)

## 50 கிலோ குண்டே வெடித்தது!

கொழும்பு, ஒக். 16


நேற்றுக் கொழும்பில் வெடித்த குண்டு 50 கிலோ நிறையுடையது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குண்டு வெடித்ததைத் தொடர்ந்து 45 நிமிட நேரம் கொழும்பை அதிர வைக்கும் வகையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகவும் —

கோட்டைப் பகுதியில் இருந்து எழுந்த புகை மண்டலம் நெருப்பைக் கக்கியவாறு வானத்தை நிறைத்ததாகவும் — கொழும்பு வாசி ஒருவர் தெரிவித்தார்.

அரிசி மூடைகள் ஏற்றிய லொறி ஒன்றில் இந்தக் குண்டு எடுத்து வரப்பட்டதாக மற்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

(இ-3-21)



குண்டுத்தாக்குதலினால் சேதம் அடைந்த உலக வர்த்தக மையக்கட்டடம் இதுதான். இக்கட்டடத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி திறந்து வைத்திருந்தார்.

162 மீற்றர் உயரமான 39 மாடிகளைக்கொண்ட இக்கட்டடத் தொகுதி இலங்கையிலேயே அதிக உயரமுடையதாகும்.

சிங்கப்பூரைச் சேர்ந்த ஓவர்சீஸ் ரியாலிட்டி என்ற நிறுவனம் 11 கோடி அமெரிக்க டொலர் செலவில் இந்த இரு தொகுதிகளைக் கொண்ட கட்டடத்தை அமைத்துள்ளது.

## காயம் அடைந்தோரில் 35 பேர் வெளிநாட்டவர்

கொழும்பு, ஒக். 16

காயமடைந்த 105 பேரில் 35 பேர் வெளிநாட்டில் இருந்து வந்து கலதாரி ஹோட்டலில் தங்கியிருந்த உல்லாசப்பயணிகளாவர்.

பிரான்ஸ், சிங்கப்பூர், பிரிட்டன், ஜப்பான், சவூதிஅரேபியா, இந்தியா, எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

அங்குபணியில் இருந்த இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 70 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர். ஏனையோர் வீடு சென்று விட்டனர்

(இ-21-3)

## 100 க்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதம்!

நேற்று நடந்த குண்டு வெடிப்பில் ஹில்டன் ஹோட்டல், கலதாரி ஹோட்டல், உலக வர்த்தக மையம், ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கு சேதம் ஏற்பட்ட அதேவேளை —

அங்கு நிறுத்தப்பட்டிருந்த 28 வாகனங்கள் பலத்த சேதமடைந்தன. 80 வாகனங்கள் சிறு சேதத்துக்குள்ளாகின.

ஓர் அம்புலன்ஸ் வண்டியும், தீயணைப்பு வாகனமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-21-3)

## 6 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

தாக்குதலில் உயிரிழந்த 17 பேரில் 6 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. இறந்தவர்களில் அங்கு பணியாற்றிய பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தரும் ஒருவராவார்.

(இ-21-3)

## லேக்ஹவுஸ் கட்டடத்துள் அதிரடிப்படை தேடுதல்!

### மோதலில் 2 படையினர் பலி!!

கொழும்பு, ஒக். 16

குண்டு வெடிப்பை நடத்தியவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனக் கட்டடத்துக்குள் ஒளிந்திருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து விசேட அதிரடிப் படையினர் பெரும் தேடுதல் ஒன்றை அங்கு மேற்கொண்டனர்.

அங்கு ஒளிந்திருந்தவர்களுக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் இரு விசேட அதிரடிப் படையினர் உயிரிழந்ததாகவும், 4 அதிரடிப்படையினர் காயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையின் போது தாக்குதல் நடத்திய மூவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

லேக்ஹவுஸ் நிறுவனத்தைப் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாகவும் —

அங்கிருந்த இயந்திரங்களுக்கோ, உப

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்திய குழுவில் 10 பேர்

நேற்று கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களில் 10 பேர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் படையினரின் சூட்டுக்கு ஒருவர் லேக்ஹவுஸ் கட்டடத்துக்குள்ளும், மற்றவர் அக்கட்டடத்துக்கு முன்பும் உயிரிழந்துள்ளனர் என்றும் —

மற்றும் இருவர் லேக்ஹவுஸ் கட்டடத்துக்குள் சிக்கி கிரனேட்டை தமது உடலில் வெடிக்க வைத்து இறந்தனர் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனையோர் மூன்று குழுக்களாகப் பிரிந்து சென்று தப்பிவிட்டதாக படைத் தரப்பு நம்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-21-3)

## புலிகளை அரசு குற்றஞ்சாட்டுகிறது; ஆனால் புலிகள் மறுத்து அறிக்கை

கொழும்பு, ஒக் 16

கொழும்பில் நேற்று நடந்த குண்டுவெடிப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று இலங்கை அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமைச் செயலக அறிவிப்பாளர் அன்ரன்ராஜா இக் குற்றச்சாட்டைப் பலமாக மறுத்துள்ளார்.

குண்டு வெடிப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் —

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது பழிசுமத்துவதற்காக படையினரில் சிலர் திட்டமிட்டு செய்த சதி இது என்றும் — அவர் தெரிவித்தார்.

(இ 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மயிலு சிவநாதன்

(நாடாளுமன்ற உரை பெயர்ப்பாளர்)

கொல்லங்கலட்டி கிராமக்கோட்டடியைச் சேர்ந்த கண்மலரின் அன்புக் கணவர் சிவநாதன் 1997-10-10 வெள்ளியன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1997 - 10 - 13 திங்களன்று கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
அ. மோகன்
[மைத்துனன்]

ஆனந்தா அவெனியூ,
உடுவில்
சுன்னாகம்.

[ 50566]

## அருணன் துரைசிங்கம்

திருநெல்வேலி கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணன் துரைசிங்கம் நேற்று (15-10-97) காலமானார்.

இவர் து. பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருணன் கனகுவின் அன்புச் சகோதரரும், சற்குணேஸ்வரன் (ஜேர்மனி), லிங்கேஸ்வரன் (ஹொலண்ட்), சிவஞானம் சந்திரா (ஜேர்மனி), குணசேகரம் வசந்தாதேவி (ஜேர்மனி), சுகந்தன் இந்திராணி (ஜேர்மனி), உதயன் கமலாதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-10-97) வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
ந. மங்கையர்க்கரசி
(மகள்)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(50579)

## செல்லத்துரை அருளானந்தம்

[மண்டைதீவு]

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அருளானந்தம் 15-10-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் மருமகனும், உலகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீபத்மராஜா, ஸ்ரீபத்மினி, ஸ்ரீரவீந்திரராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகதாம்பாளின் சிறிய தகப்பனும், யோகநிதி, தருமராஜா, ஜெயகௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தினேஷ்சன், திவ்வியன், துவாரகன், பிரவீனா, கீர்த்தனா, லோஜிதா, கோமகன், மயூரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் 16-10-97 வியாழன் நண்பகல் 12மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. அ. ஸ்ரீபத்மராஜா
(மகன்)

கொக்குவில் கிழக்கு,
கோயில் வீதி,
கொக்குவில்.

(50581)

## செல்லையா தம்பிராசா

(ஓய்வுபெற்ற P. W. D. ஓவசியர்)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது நாவலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிராசா அவர்கள் 14-10-97 இல் நாவலப்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா— சின்னாச்சிப்பிள்ளையின் புதல்வரும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சு. வனிதாராணி, பஞ்சலிங்கம் (நாவலப்பிட்டி), தியாகலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற யோகலிங்கம், காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவாமிநாதன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), றஞ்சினி, சில்வியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாவலப்பிட்டி பொன்னம்பலம், திருமதி சி. நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-10-97) வியாழக்கிழமை நாவலப்பிட்டியில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சு. வனிதாராணி
(மகள்)

''அழகாபுரி''
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(50580)

## அளவெட்டியில் மிதி வெடி

யாழ்ப்பாணம், ஒக். 16

வீதியால் நடந்து சென்றவர் வீதியோரமாக இறங்கிய வேளை மிதிவெடியில் சிக்குண்டு இடது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

அளவெட்டி மேற்கில் நரசிம்மர் ஆலயப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-51-15)

## கழிவு நீர் வடிகால்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். மாநகரசபைப் பகுதிகளுக்கு உட்பட்ட பெரிய கழிவு நீர் வடிகால்களை துப்புரவாக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதை அடுத்தே, வடிகால்களில் வளர்ந்திருக்கும் செடிகள், புல்பூண்டுகள் யாவும் வெட்டப்பட்டுதுப்புரவுப்பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. யாழ். மாநகரசபை பணியாளர்கள் இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(ஐ 15)

## எரிகாயத்துக்கு உள்ளானவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 16

கொக்குவிலில் கடந்த 12 ஆம் திகதி எரிகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கனகசிங்கம் ஈஸ்வரி (வயது 30) என்பவரே மரணமானவர் ஆவார்.

படுக்கையில் இருந்தவேளை குப்பிவிளக்கு தட்டுண்டு தீப் பற்றியதாக தெரிவிக்கப்பட்டது. (இ-15)


விக்னா
கல்வி நிறுவனம்
DAY CLASS
ACCOUNTING
Mr. BALAVASAN
ஒற்றைப்பதிவு
ஆரம்பம்:-
17—10—1997 நாளை
வெள்ளி 9-11 மணி
(50574)



வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள். மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
[illegible]
(50540)


## கண்ணீர் அஞ்சலி

## கந்தையா குலசேகரம்பிள்ளை (J. P.)

( எழுதுமட்டுவாள் )

சமூக சேவையிலும், விழுபளை கண்ணகை அம்பாள் ஆலய நிர்வாக, திருப்பணி வேலைகளிலும் என்னுடன் தோளோடு தோள்நின்று உழைத்த அமரர் க. குலசேகரம்பிள்ளையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. வேலாயுதம்
( சட்டத்தரணி )

(சி/1788)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்: 1917 — 12 — 04

மறைவு: 1997 — 10 — 01

அமரர் கனகசபாபதி பொன்னுத்துரை

(ஆவரங்கால் வாசரும் வைசிக குல திலகரும் வைத்திய பேராசான் பொன்னையா செட்டியார் அவர்களின் பேரனும்)

நாள்கள் பதினாறு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு அகலாது
மீளவும் எழுக எம்மை ஆளவும் வருக!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் இன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் கோயிலடி,
ஆவரங்கால்,

(50536)

## மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தம்பி இரத்தினம்மா

வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி இரத்தினம்மா 15 - 10 - 97 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னத்தம்பி (இந்திரா ஸ்ரோர்ஸ், வெலிமடை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசாவின் சகோதரியும், ஆனந்தகுமாரசாமி(இந்திரா ஸ்ரோர்ஸ், மாங்குளம்), காலஞ்சென்ற அருந்தவநாதன், கிரியாசக்தி, கமலாதேவி, தில்லைநாயகி, தேவகாரணி, சிவசுப்பிரமணியம் (கனடா), சண்முகநாதன் (இந்திரா ஸ்ரோர்ஸ், மாங்குளம்), நித்தியானந்தன் (இளைப்பாறிய விலைமதிப்பீட்டாளர்), இராமநாதன்(இளைப்பாறிய மராயன் பொறியியலாளர்), பிறைசேர் அழகனார் (இளைப்பாறிய T. A., நீர்ப்பாசனத் திணைக்களம்), சக்திதாசன் (இளைப்பாறிய பிரதம லிகிதர், கிளிநொச்சி), வசந்தா, விபுலாதேவி (கனடா), அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகனா (ஆசிரியை), பாபு (மொறட்டுவ பல்கலைக்கழகம்), அரவிந்தர் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), மஞ்சுளா (ஆசிரியை), திரு. திருமதி வாசுகி நிரஞ்சன் (கம்பியூட்டர் பொறியியலாளர், லண்டன்), அஜித் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), கஜன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி), சிவசர்மிளா, சிவகலா, சிவசகிலா (கனடா), சுகன்னியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 15-10-97 புதன் கிழமையன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சி. சண்முகநாதன்
(மகன்)

வட்டு-கிழக்கு,
சித்தன்கேணி.

(50582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 50க்கு மேற்பட்ட விமானங்கள்
★ நான்கு ஏவுகணைக் கப்பல்கள்
★ அணு சக்தியில் இயங்கும் நீர்மூழ்கி சகிதம்

# அமெரிக்க போர்க் கப்பல் "லிமிட்ஸ்"

# வளைகுடாப் பகுதிக்குள் பிரவேசம்

டுபாய், ஒக் 16

அமெரிக்கக் கடற்படையின் 'லிமிட்ஸ்'' என்னும் பாரிய விமானம் தாங்கிக் கப்பல் வளைகுடாப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளது.

''F—18'' என்ற 50 நவீன போர் விமானங்கள் உட்பட பல நவீன விமானங்கள் இக் கப்பலில் உள்ளன.

சகல வசதிகளும் கொண்ட போர்க் குழு ஒன்று, இதில் தரித்துள்ளது. இக் குழுவில் ஏவுகணைகளைத் தாங்கும் இரண்டு கப்பல்கள், தாக்கி அழிக்கும் கப்பல் ஒன்று இலக்கு நோக்கித் தானே சென்று தாக்கி அழிக்கும் ஏவுகணைக் கப்பல் ஒன்று என்பன அடங்கும்.

அத்துடன் இக்கப்பலில் அணுசக்தியால் இயங்கும் தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றும் உள்ளது.

இக் கப்பலின் மொத்த நிறை 73 ஆயிரம் தொன்கள் ஆகும்.

இக் கப்பல் தற்சமயம் எங்கே தரித்துள்ளது என்ற சரியான விவரத்தை பாஹ்ரெய்னில் உள்ள அமெரிக்க கடற்படையின் 50 ஆவது பிரிவின் தலைமையகம் வெளியிடவில்லை.

ஈராக்கிற்கு எதிராகத்தடை உத்தரவுகளை அமுல் படுத்தும் சர்வதேசப் படையின் ஒரு பகுதியாக இக்கப்பலில் உள்ள போர்க் குழு பணியாற்றும் என்றும்—

தெற்கு ஈராக்கில் தடை செய்யப்பட்ட வான்பரப்பைக் கண்காணிக்கும் கூட்டணிப் படையுடன் அது இணைந்து செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பலின் வருகையால் வளைகுடாப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க விமானங்களுக்கும் அப்பிராந்தியத்தில் பறக்கும் ஈராக், ஈரான் நாடுகளின் விமானங்களுக்கும் இடையே மோதல் ஏற்படும் ஆபத்தும் உருவாகியுள்ளது.

## மொஸ்கோவில் 50 ஆயிரம் அகதிகள்

மொஸ்கோ, ஒக். 16

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 50 ஆயிரம் அகதிகளும், 2லட்சம்சட்டவிரோத குடியேற்ற வாசிகளும் தங்கியுள்ளதாக ரஷ்ய . வரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மொஸ்கோவில் ஆண்டு தோறும் சுமார் ஆயிரத்து 200 பேர் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்து வருகின்றனர். [ஐ]

## அல்ஜீரியாவில் 43 பயணிகள் வெட்டிக் கொலை

அல்ஜியர்ஸ், ஒக். 16

அல்ஜீரியத் தலைநகர் அல்ஜியர்ஸில் இரண்டு பஸ்களை இடைமறித்த தீவிரவாதிகள் அவற்றில் இருந்த 4ஃ பயணிகளை வெட்டிக் கொன்றுள்ளனர். படுகாயமுற்ற 15பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் அம்புலன்ஸ் ஒன்றையும் வழிமறித்துத் தாக்கி அதிலிருந்த தாதி ஒருவரையும், மருத்துவிச்சியையும் வெட்டிக் கொன்றனர்.

## ஜப்பானிய தூதரகக் கட்டடம் லீமா நகரில்நேற்று இடிப்பு!

### பூங்கா அமைக்க ஏற்பாடு

லீமா, ஒக். 16

பெருநாட்டில் லீமாநகரில் உள்ள ஜப்பானியத் தூதரகக் கட்டடம் நேற்று புல்டோசர்களால் இடித்து தரை மட்டமாக்கப்பட்டது.

இந்தத் தூதரகம் அமைந்துள்ள பகுதியைச் சமாதானப் பூங்காவாக மாற்றி அமைக்க பெரு அரசு முடிவு செய்துள்ளது.

பெருவின் ''துபக் அமாறு'' போராளிகள் இந்த தூதரகக் கட்டடத்தை முற்றுகையிட்டு ஜப்பானியத் தூதர் உட்பட பல ராஜதந்திரிகளையும், அரச அதிகாரிகளையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தது தெரிந்ததே.

பின்னர் சுமார் 100 நாள்களின் பின் பெரு நாட்டுப் படைகள் திடீர்த் தாக்குதல் நடத்தி பணயக் கைதிகளை அங்கிருந்து மீட்டன.

அங்கிருந்த ''துபக் அமாறு'' கெரில்லாக்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவத்தின் பின் அந்த ஜப்பானியத் தூதரகக் கட்டடம் கைவிடப்பட்டது. தற்போது அவ்விடத்தில் நினைவுப் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. (ஐ)

## அமெரிக்க பொப் பாடகர் விமான விபத்தில் பலி!

நியூயோர்க், ஒக். 15

அமெரிக்காவின் பிரபல பொப் இசைப்பாடகர் ஜோன் டென்வர் அமெரிக்காவில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்தார். அவருக்கு வயது 53.

டென்வரின் ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்ட விமானம் பாறைகள் மிகுந்த கடற்பகுதியில் மோதி விபத்துக்குள்ளாயிற்று. (இ-9)

## புதிதாக பல இடங்களில் புகை மூட்டம் பரவுகிறது

### செய்மதிப் படங்கள் தகவல்

ஜகார்த்தா, ஒக். 16

இந்தோனேசியாவில் காட்டுத் தீயினால் பரவும் புகைமூட்டம் மீண்டும் அதிகரித்திருப்பதாக செயற்கைக் கோள் தகவல்கள் மூலம் தெரிய வந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்ட படங்களின் படி இந்தோனேசியத் தீவுகளில் 40 இடங்களில் தீ எரிவது புலப்பட்டது. பின்னர் கடைசியாகக் கிடைத்த படங்களின் படி தரையில் 60 இடங்களில் இருந்து புகை மூட்டம் பரவுவது தெரியவந்துள்ளது.

மழை பெய்ததை அடுத்து விவசாய நடவடிக்கைகளுக்காகத் தரையைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் காடுகளுக்கும், புதர்களுக்கும் தீ வைப்பதாலேயே புதிதாகப் புகை மூட்டம் கிளம்பியிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ)

## தலிபான் படைகளுக்கு இழப்பு

காபூல், ஒக். 15

வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள மொசாரிசெரிப் நகருக்கு வெளிப்புறப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக நடந்த கடும் சண்டைகளில் தலிபான் படையினர் கடும் இழப்புக்களைச் சந்தித்துள்ளதாக ஏ. எஸ்: பி செய்தி தெரிவிக்கின்றது.

இப்போது குண்டுஸ் மாகாணத்திலுள்ள தலிபான் நிலைகளை எதிர்த்தரப்பு கூட்டணிப்படைகள் இலக்கு வைத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. (இ-9)

## 2 லட்சம் மக்கள் அஞ்சலி

ஹவானா, ஒக். 16

லத்தீன் அமெரிக்காவின் கெரில்லாப் புரட்சி வீரர் ஏர்னெஸ்ரோ சே குவராவின் எலும்புக் கூடுகள் அடங்கிய பேழைக்கு கியூபா மக்கள் உணர்ச்சி பூர்வ அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஹவானாவில் புரச்சிச் சதுக்கத்தில் வைக்கப்பட்டிருந்த பேழைக்கு இரு நாள்களில் மட்டும் 2 லட்சம் பேர் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

உலக அரங்கில்

## இந்தியா மகிழ்ச்சி

புதுடில்லி, ஒக். 15

அமெரிக்கா பயங்கரவாத அமைப்புக்கள் எனப் பிரகடனம் செய்துள்ள 30 இயக்கங்களில் காஷ்மீர் பிரிவினைவாத குழுவும் சேர்க்கப்பட்டிருப்பதை இந்தியா வரவேற்றுள்ளது.

காஷ்மீரில் தனி நாடு கோரிப் போராடிவரும் ஹர்காத் உல் அன்ஸார் என்ற அமைப்பையே அமெரிக்கா தனது பட்டியலில் சேர்த்துள்ளது (ஐ)

## ஓய்வூதியர் 43 பேர் மரணம்

கியூபெக், ஒக். 16

கனடாவின் கியூபெக்கில் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 43 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் ஓய்வூதியக்காரர்களாவர்.

கனடாவில் கடந்த 30 ஆண்டுகளில் நடந்த மிக மோசமான விபத்து இது எனச் சொல்லப்படுகிறது.

விபத்தில்உயிரிழந்த அனைவரும் 60 க்கும் 70 க்கும் இடைப்பட்ட வயதினராவர் இவர்கள் ஓய்வூதியர் கழகம் ஒன்றின் அங்கத்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ் விபத்துச் சம்பவம் குறித்து கனடிய பிரதமர் அனுதாபம் வெளியிட்டுள்ளார். (ஐ)

## வீரப்பனை மீண்டும் சந்திக்க 'நக்கீரன்' ஆசிரியர் மறுப்பு

சென்னை, ஒக். 16

பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக சந்தன மரக் கடத்தற்காரன் வீரப்பனை மீண்டும் சந்திக்க ''நக்கீரன்'' சஞ்சிகை ஆசிரியர் ஆர். ஆர். கோபால் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அவரது இந்த முடிவு கர்நாடக அரசாங்கத்துக்கு நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டதாக தமிழக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இது விடயத்தில் கர்நாடக அரசின் பதில் கிடைத்த பின்னரே அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஜாலியன்வாலா பாக்கில் மகாராணி மலரஞ்சலி!

அமிர்தசரஸ், ஒக். 16

சுதந்திரப் பொன் விழாவை ஒட்டி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் மகாராணி நேற்று முன்தினம் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகருக்கு விஜயம் செய்தார்.

சீக்கியர்களின் புனித தலமான பொற்கோயிலுக்கு மகாராணி சென்றபோது அங்குள்ள வீதிகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடி நின்று அவரை வரவேற்றனர்.

தங்கத்தினால் வேயப்பட்ட கூரையைக் கொண்ட மூலஸ்தானத்தின் நடுவே அமைந்துள்ள நீள் சதுர வடிவ ஏரியைச் சுற்றியுள்ள பளிங்குக் கல் பதித்த தரையில் மகாராணி நடந்து சென்றார்.

சீக்கியர்களின் புனித நிறமான ''ஒறேஞ்'' நிற ஆடையை மகாராணி அணிந்திருந்தார்.

விசேட விதிவிலக்கு அளிக்கப்பட்டதால் மகாராணி வெள்ளை நிற கால் உறையுடன் உள்ளே சென்றார்- ஏனையோர் வெறும் கால்களுடனேயே சென்றனர்.

பொற்கோயிலுக்கு அருகே உள்ள ஜாலியன் வாலா பாக் பூங்கா நினைவிடத்துக்கும் மகாராணி விஜயம் செய்தார்.

1919இல் பிரிட்டிஷ் படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுச் சின்னத்தில் மகாராணி மலர் வளையம் ஒன்றை வைத்து அஞ்சலி செலுத்தியபோது அங்கு கனத்த மௌனம் நிலவியது.

பூங்காவுக்குள் மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. (ஐ)

## அமெரிக்கக் கப்பலை கியூபா அனுமதிக்குமா?

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கியூபாவில் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதற்கான ஆயத்த வேலைகளை கியூப அரசு மேற்கொண்டு வருகிறது.

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக அமெரிக்க யாத்திரிகர்களை ஏற்றிவரவுள்ள கப்பல் ஒன்றை நாட்டுக்குள் அனுமதிப்பதா என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக கியூப அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

10 லட்சத்துக்கு மேற்பட்ட கியூபா மக்கள் வாழும் அமெரிக்காவின் மியாமி பிரதேசத்தில் உள்ள கத்தோலிக்கத் திருச்சபை சுமார் ஆயிரம் யாத்திரிகர்களை கப்பலில் அழைத்துவர இருப்பதாக கியூப அரசிடம் தெரிவித்துள்ளது.

லத்தீன் அமெரிக்காவில் பாப்பரசர் இதுவரை விஜயம் செய்யாத ஸ்பெயின்மொழி பேசும் ஒரே நாடு கியூபாஆகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிறிமா கைலையின் பிறவுண், வெள்ளை பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 17-10-97 அன்று ஒருநாள் குஞ்சும், 29-10-97 அன்று ஒரு மாதக் குஞ்சும் விற்பனைக்குண்டு. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு:- சே. கிருஷ்ணகுமார், சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக) அல்லது கண்ணா வீடியோ சென்ரர், உடுவில். [50498]

நல்லூர் செட்டித்தெருவிலுள்ள 4 பரப்புக்காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. என். வாமதேவன், 71 A, புங்கங்குள வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [50546]

## தவறிவிட்டது

வட்டு. கிழக்கு சித்தன் கேணியைச் சேர்ந்த ந. தவமலர்என்பவரது675102260V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, மானிப்பாய்க்கும், சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சித்தன்கேணி தபாற் கந்தோரில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [50549]

தர்மலிங்கம் அச்சுதன் ஆகிய எனது கறுப்பு நிற (B) பாக்குடன் ஒரு சிறு தொகைப் பணமும், அடையாள அட்டையும் உரும்பராய்க்கும், புன்னாலைக் கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மனிதாபிமானத்துடன் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [50563]

விமலாதேவி செல்லத்துரை என்பவரது 467831666V இலக்க தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் தட்டாதெருச் சந்திக்கும் ஐயனார் கோயில் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 12, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [50556]

வசந்தருபன் சுஜாதா என்பவரது விசேட அடையாள அட்டை, பாஸ் என்பன ஆரியகுளம் சந்திக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், சுப்பிரமணியம் செல்வராசா, பாரதிபுலம், கலாசாலை வீதி, திருநெல்வேலி (தயவுடன் ஒப்படைத்து உதவுங்கள்). [50557]

## உடன் விற்பனைக்கு

பிறிமா, பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் அழகான வளர்ப்பு மீன்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [50534]

## மீனவர் நிவாரணம்

தென்மராட்சி ஒக். 16

தென்மராட்சி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பிரிவு ப. நோ. கூ. சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ - 117)

---

வலி - கிழக்கு தென் பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கிளைக்குழுத் தேர்தல் - 1997

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் எதிர்வரும் 25-10-97 ஆம் திகதி சனிக்கிழமையும், கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் 01-11-97 ஆம் திகதியும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செ. திருச்செல்வம்**
தேர்தல் உத்தியோகத்தர்.

நீர்வேலி.
1997-10-14. (சி-1781)

---

யா/நெடுந்தீவு
றோ. க. மகளிர் வித்தியாலயம்
அபிவிருத்திச் சங்கம்

## வாழ்த்துகின்றோம்

95 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| அ. சரத்குமார் | 135 | புள்ளிகள் |
| சி. கஜேந்தினி | 124 | புள்ளிகள் |
| அ. மெர்கறி ம.வி.மு. | 109 | புள்ளிகள் |

கடந்த ஆண்டு போல் இவ்வாண்டும் மாணவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

(50510)

---

## ஓராண்டு நினைவு அஞ்சலி

### பொன்னையா சிவபாதசுந்தரம்

மலர்வு: 29-12-1941
உதிர்வு: 27-09-1996

திதி: 16-10-1997

இருபத்தாறு வருடகாலமாய்
எம்முடனே வாழ்ந்திருந்து விட்டு
எம்மைப் பிரிந்து சென்றீரே!
வெண்முகிலாய் வேறாகிப் பட்டுடலும்
வெந்ததோ? ஐயா நீறாகி
நீர் எங்குற்றீர்? கட்டுமீறிய அன்பினால்
கண்கள் நீர்க்குளமாயிற்றே ஐயா!

உங்கள் பிரிவால் வேதனையுறும்:
திருமதி சிவபாதசுந்தரம் குடும்பம்

3 ஆம் வட்டாரம்,
சங்கத்தாகேணி,
புங்குடுதீவு.

[50514]

---

## முதலாம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 17 – 04 – 1912
மறைவு: 28 – 09 – 1996

### ஐயாத்துரை நாகரத்தினம்

(தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

திதி: 16-10-97

எமது அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள்:
ஐ. பொன்னையா, ஐ. சபாரத்தினம்,
ந. மகேஸ்வரி.
பேரப்பிள்ளைகள்.

பாடசாலை ஒழுங்கை,
தாவடி. (50375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

# 8 ஆம் ஆண்டு மாணவருக்கு மாகாண மட்டப் பரீட்சை

வலிகாமம் தெற்கு, ஒக். 16

இவ்வருடம் பாடசாலைகளில் நடைபெற உள்ள ஆண்டிறுதிப் பரீட்சைகளில் 8 ஆம் ஆண்டுக்கான பரீட்சை வடக்குக் கிழக்கு மாகாண மட்டத்திலான பொதுப் பரீட்சையாக நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்குத் தேவையான முன் நடவடிக்கைகளை எடுப்பதற்காக பரீட்சைக்குத் தோற்ற உள்ள தேர்வு நாடிகளின் எண்ணிக்கை கோட்ட ரீதியாக பாடசாலைகள் தோறும் திரட்டப்பட்டு வருகின்றன. (ஐ - 152)

---

## கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் பிரபல வங்கிகளுக்கு அண்மையில் இல. 112 இல் மேல் மாடியுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**5/1, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.**

(50543)

---

பிராமண இளைஞர் சமாஜ்
நடத்தும்

## ஆங்கில வகுப்பு ஆரம்பம்

நாள்: 16–10–1997 வியாழக்கிழமை
நேரம்: பி. ப. 2-30 பழைய நேரம்
இடம்: உரும்பராய் (கற்பகப் பிள்ளையார் கோயிலடி)

ஆங்கிலம் கற்க ஆர்வமுள்ள அந்தணர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சுபம்.

செயலாளர்,
பிராமண இளைஞர் சமாஜம்.

(59554)

---

## பிறந்தநாளில் ஓடி வருவாயா?

### பன்னீர்ச்செல்வம் மதுரா

மலர்வு: 16-10-92
உதிர்வு: 19-02-97

பூவே நீ மதுவை வைத்திருந்தாய்
நீ மயங்காமல் உன்னிடம்
வண்டுகளான நாங்கள் அல்லவா
மயங்கினோம்... இப்போ நீயின்றித்
தவிக்கிறோம் ஓடி வருவாயா?

செ. ஜெயக்குமார்
[ மாமா ]

கல்லூரி வீதி,
ஒடக்கரை,
பருத்தித்துறை.

[50515]

---

## நன்றி நவிலல்

வேலணை தெற்கு துறையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது தந்தையார்

### அமரர் நாகமுத்து பரமசாமி

அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவிகள்ஒத்தாசைகள் புரிந்த துறையூரைச் சேர்ந்த மக்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

வேலணை தெற்கு.

(50547)

---

## 31 ஆம் நாள் ஆன்ம இளைப்பாற்றுதிருப்பலி

### திருமதி அருளப்பு அன்னம்மா

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புனித பிரான்சிஸ் சவேரியார் கோவிலில் மரித்த அருளப்பு அன்னம்மாவின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவர் அருட்திரு. பிரான்சிஸ் மைக்கல் யோசப் அவர்களின் தாயாரும், வண. மைக்கல் சவரிமுத்து O.M.I., அருட் சகோதரி பிரான்சிஸ்கா மேரி F.M.M. ஆகியோரின் உடன் பிறந்த சகோதரியுமாவார்.

வண. மைக்கல் சவரிமுத்து O.M.I
(தம்பி)

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(50553)

## நன்கொடை

சாவகச்சேரி பிரதேச சபையின்நாவற்குழி, கைதடி, சரசாலை, வரணி, கச்சாய், மிருசுவில் ஆகிய உப அலுவலகங்களின் எல்லைக்குட்பட்ட 67 சனசமூக நிலையங்களுக்கான 1997 ஆம் ஆண்டுக்குரிய நன்கொடைக் காசோலைகள் பிரதேசசபை தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச் சனசமூக நிலையங்களின் தலைவர் அல்லது செயலாளர் நிலையத்தின் இறப்பர் முத்திரையுடன் மீசாலை புத்தூர்ச் சந்தியிலுள்ள பிரதேச சபை தலைமையலுவலகத்திற்கு வருகை தந்து காசோலையைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபைவிசேட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ - 117)

# ரெலோ அலுவலகம் மீது மட்டக்களப்பில் தாக்குதல்

## மூவர் பலி! மூவர் காயம்!!

மட்டக்களப்பு, ஒக். 16

மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதியில் அமைந்துள்ள ரெலோ அமைப்பின் அலுவலகம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் 3 ரெலோ உறுப்பினர்கள் உயிரிழந்தனர்; 3பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 2மணியளவில் 20-க்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் வாவியைக் கடந்து ஆரையம்பதிக்குச் சென்று முகாமைத் தாக்கிவிட்டுத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

முகாம் தாக்கப்பட்ட சமயம் அங்கு 30 பேர் இருந்ததாகவும்—

தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலில் புலிகளுக்கு சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும்—ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21-3)

## சிறுவர் மெய்வன்மை போட்டிகள்

தென்மராட்சி, ஒக். 16

பளை இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலைய அனுசரணையுடன் இத்தாவில் பாலர் பாடசாலைச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்போடுகேணி பாடசாலை மைதானத்தில் பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் சி. இராசதுரை தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக பளை பிரதேச சபைச் செயலாளர் கு. ந. பாலச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை அதிபர் க. கனகராசாவும் கலந்து கொள்வர். (ஐ-117)

### உழவு இயந்திரங்களுக்கு

# தென்மராட்சியில் டீசல் விநியோகம்

தென்மராட்சி, ஒக். 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை விதைப்புக்காக ப. நோ. கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையங்களில் கடந்த செவ்வாய் முதல் உழவு இயந்திரங்களுக்கு டீசல் வழங்கப்பட்டு வருகிறது.

வயல்களில் விதைப்பு வேலைகளில் ஈடுபடும் உழவு இயந்திரங்களுக்கு தலா 30 லீற்றர் வரை டீசல் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் எரிபொருள் நிலையங்களில் டீசல் இல்லாததால் விதைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டிருந்தன. அதனையடுத்து தென்மராட்சி பிரதேச செயலரின் வேண்டுகோளின் படி பௌஸர்கள் மூலம் டீசல் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இதேவேளை —

மழை பெய்துள்ளதை அடுத்து காலபோக நெற்செய்கைப் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது. (ஐ-31-117)

## வீதி விபத்துக்களில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரு வீதி விபத்துக்களில் மூவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பகுதியில் இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் வீதியால் சென்றவரான கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா தில்லைநடராசா (வயது 42) என்பவரும்—

நீராவியடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவர்களான நீராவியடியைச் சேர்ந்த சோமசுந்தரம் ஜெயராசா (வயது 54) அவர் மனைவி ஜெயராசா காந்திமதி (வயது 46) ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-15)

# தடைசெய்யப்பட்ட கருத்தடை மருந்து

## மானிப்பாய் பார்மஸியில் மீட்பு

திருநெல்வேலி, ஒக். 16

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள தனியார் மருந்து விற்பனை நிலையம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது பாவனைக்குத் தடை செய்யப்பட்ட கருத்தடை மருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் கடந்த வாரம் மேற்படி தனியார் மருந்து விற்பனை நிலையத்தில் பரிசோதனை மேற்கொண்ட போதே அவை கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன.

'ஒரிஜினல்லேபல்' இல்லாத கொள்கலன்களில் வேறு மருந்து வகைகளும் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

காலாவதியாகும் திகதி, உற்பத்தி செய்யப்பட்ட திகதி, எந்த நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டது போன்ற விவரங்கள் எதுவும் லேபல்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

மேல் நடவடிக்கைக்காக உணவு மருந்து பரிசோதகரினால் இந்த சட்ட விரோத மருந்துகள் கைப்பற்றப்பட்டன. (ஐ-135)

# மிதி வெடிகளில் சிக்கி இருவர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஒக் 16

கோண்டாவில், புத்தூர்ப் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருமிதி வெடிச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

கோண்டாவிலில் இராணுவ பாதுகாப்பு அரண் இருந்த பகுதிக்குள் விறகு எடுக்கச் சென்றபோது மிதிவெடியில் சிக்குண்ட தம்பிரட்ணம் சசிரேகா (வயது20) என்ற இளம் பெண்ணின் வலது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டது.

புத்தூர்ப்பகுதி ஆவரங்கால் கிழக்கில் வளவு துப்புரவு செய்து கொண்டிருந்த வேளை மிதிவெடியில் சிக்குண்ட ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த செல்லன் அருளானந்தராசா (வயது37) என்பவரின்வலது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டது. இவர் கூலி வேலை செய்பவராவார்.

படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-15)

## தொழுநோய் தடுப்பு அதிகாரி நியமனம்

திருநெல்வேலி, ஒக். 16

யாழ். மாவட்ட தொழுநோய்த்தடுப்பு சுகாதார பரிசோதகராக என். சிவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரு வருட காலமாக இம்மாவட்டத்தில் தொழுநோய்த்தடுப்புப் பிரிவு சுகாதார பரிசோதகர் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. முன்னர் தொழுநோய்த் தடுப்புப் பிரிவு அதிகாரியாக கடமையாற்றிய எம். குணரத்தினம் தற்போது வன்னிப் பிராந்தியத்தில் கடமையாற்றி வருகின்றார். (ஐ-185)

# தபால் அடையாள அட்டை பெற நேரத்துடன் விண்ணப்பிக்குக

திருநெல்வேலி, ஒக். 16

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தபால் அறிமுக அட்டை பெறுவதற்கு நேர காலத்துடன் விண்ணப்பிக்குமாறு யாழ். பிரதம தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடைசி நேரத்தில் விண்ணப்பம் செய்வதால் ஏற்படும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக நேர காலத்துடன் விண்ணப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட மாணவர்களை அவர் கேட்டுள்ளார். (ஐ-135)

# விவசாய ஓய்வூதியம் பெற வயதுக் கட்டுப்பாடு

தென்மராட்சி, ஒக். 16

விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு வயதுக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு முதல் 50 வயதுக்கு மேற்பட்டோர் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துகொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் 50 வயதுக்கு மேற்பட்டோர் சேர்ந்து கொள்ள இவ் வருட இறுதிவரை (31-12-97) அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால் இக் காலப்பகுதிக்குள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

இதேவேளை இடம் பெயர்வுகளால் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தத் தவறிய விவசாய ஓய்வூதிய அங்கத்தவர்கள் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிலுவையுடன் தமது கட்டுப்பணத்தைச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-117)

## கள்ளின் விலை அதிகரிப்பு

திருநெல்வேலி, ஒக். 16

யாழ். மாவட்டத்திலுள்ள கள்ளுத்தவறணைகளில் தென்னம் கள், பனம் கள் ஆகியவற்றின் விலைகள் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரித்துள்ளன. தென்னம் கள் ஒரு போத்தல் 15 ரூபாவாகவும், பனம் கள் ஒருபோத்தல் 13 ரூபாவாகவும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-135)

# சாரணர் ஆண்டு விழா அடுத்த மாதம் நடக்கும்

வலிகாமம் தெற்கு, ஒக். 16

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினரின் ஆதரவில் வருடாந்த சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் ஆண்டு விழாவும் அடுத்த மாதம் நடைபெற உள்ளன.

சாரணர் பாசறை விழா நவம்பர் 14 முதல் 16 வரை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும்—

குருளைச் சாரணர் ஆண்டு விழா நவம்பர் 15 ஆம் திகதி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

சாரணர்களுக்கான நிகழ்வுகளாக, தீப்பாசறை நிகழ்ச்சி, மைதானக்காட்சி, அணிநடை, பதிவேடுகள், நிலையான காட்சி நடிப்பு, விளையாட்டு, பாட்டு ஆகியவை இடம்பெற உள்ளன. (ஐ-152)

# 5 ஆயிரத்து 891 பேருக்கு சொட்டு மருந்து

திருநெல்வேலி, ஒக். 16

கடந்த சனிக்கிழமையன்று இரண்டாம் கட்ட போலியோ தடுப்பு மருந்து 5 ஆயிரத்து 891 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பெற்றோர்கள் தங்கள் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இச் சொட்டு மருந்தை வழங்கினர். (ஐ-135)

## மானிப்பாயில் வெள்ளி விழா

திருநெல்வேலி, ஒக், 16

கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழா எதிர் வரும் சனிக்கிழமையன்று நடைபெறவுள்ளது. (ஐ-135)

## வேலணைத்துறை உப அஞ்சலகம் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஒக். 16

வேலணைத்துறை உப அஞ்சல் அலுவலகம் நேற்று முன்தினம் முதல் இயங்க ஆரம்பித்தது.

இந்த அஞ்சல் நிலையத்தின் அதிபர் மரணமானதையடுத்து கடந்த 8 மாத காலமாக மூடப்பட்டிருந்த இந்த உப அஞ்சல் நிலையம் நேற்றுக்காலை யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். தர்மராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

ஈ. பி. டி. பி. வேலணைப் பிரதேசப் பொறுப்பாளர் மங்கள விளக்கேற்றி வைத்தார். (ஐ-3)

# சண்டிலிப்பாயில் முதியோர் கௌரவிப்பு

சண்டிலிப்பாய். ஒக். 16

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையில் நடத்தப்பட்ட முதியோர் தின விழாவில் அதிக வயதுடைய பத்து முதியவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்றுநடைபெற்ற இவ் விழாவுடன் சிறுவர் தின விழாவும், வாணி விழாவும் நடத்தப்பட்டன. சிறுவர் தின விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும்அன்றைய தினம் நடத்தப்பட்டது. யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் சீட்டிழுப்பை ஆரம்பித்து வைத்தார். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத்திட்டம் குறித்து ஐ. தே. க. இன்னும் உடன்பாடு காணவில்லை

## றொனி டிமெல் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 16

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளின் முக்கிய விடயங்களில் ஐ. தே. க. இன்னமும் உடன்பாட்டுக்கு வரவில்லை,

ஐ. தே. க. உறுப்பினர் றொனிடிமெல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்கால அந்தஸ்து, அதிகாரத்தைப் பரவலாக்கும் அலகும், அதன் அதிகாரங்களும், காணி அதிகாரம், நிதி மற்றும் பொலீஸ் அதிகாரம் என்பனவே இன்னமும் உடன்பாட்டுச்கு வராத விடயங்களாகும். இவற்றில் சில திருத்தங்களை முன்வைக்க உத்தேசித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அரசாங்கத்தினால் கையளிக்கப்கட்ட பிரேரணைகளில் ஐ.தே.க. தெரிவித்த சுதந்திர பொலீஸ் ஆணைக்குழு, சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர நீதி ஆணைக்குழு, தேர்தல் மறுசீரமைப்பு போன்ற திருத்த ஆலோசனைகள் அடக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ-3)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 16

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பெதுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். (ஐ-5)

# பொன்னாங்காணி செய்கையை அதிகாரிகள் பார்வையிட்டனர்

சண்டிலிப்பாய், ஒக். 16

அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த வடக்கு — கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் பி. பெரியசாமி விவசாயத் திணைக்கள அதிகாரிகள் சகிதம் மானிப்பாய்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொன்னாங்காணி, வல்லாரைச் செய்கையை நேரடியாகப் பார்வையிட்டார்.

இங்கு சுமார் 40 ஏக்கர் காணியில் விவசாயிகளால் பரந்தளவில் பொன்னாங்காணி, வல்லாரை என்பன செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் தலைவர் சி. வா. மா. க. முதலியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் விவசாயப் பணிப்பாளர் கலந்து கொண்டு விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள், கஷ்டங்கள் குறித்து கலந்துரையாடினார் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதன், வவுனியா மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ், ஜெகநாதன் ''கெயர்'' நிறுவன திட்ட இணைப்பாளர் அ. அருள்ஞானம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ-135)

## போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் ஐ. நா. தின சொது அறிவுப் போட்டி முன்னர் அறிவிக்கப்பட்டபடி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாது என்றும் —

அப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏற்கனவே அறிவித்த பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## வங்கி மூலம் கடனுதவி

யாழ்ப்பாணம், ஒக். 16

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனம் இப்பிரதேச விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாகக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்து வருகிறது.

இதன்படி, முதற்கட்டமாக மக்கள்வங்கியிடமிருந்து சுயமுயற்சிக் கடனாக ரூபா 10 ஆயிரம் வீதம் ஒன்பது பேருக்கும், இலங்கை வங்கியிடமிருந்து விவசாயக் கடனாக ரூபா 15 ஆயிரம் வீதம் ஆறு பேருக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு தொகுதியினருக்குக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்க தமது சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் தலைவர் க. தியாகலிங்கம் தெரிவித்தார். (ஐ-15)

## நெற்செய்கைக் கடன்

சண்டிலிப்பாய், ஒக். 16

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பகுதியிலுள்ள 200 விவசாயிகளுக்கு ''போரூட்'' நிறுவனத்தினால் காலபோக நெற்செய்கைக் கடனாக ஆறு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி ஊடாக இக்கடன் வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ். வைரவநாதன் தெரிவித்தார். (ஐ-135)

# யாழ். ஆஸ்பத்திரியில் தண்ணீர்த்தாங்கி வீழ்ந்து நொறுங்கியது

தண்ணீர்த் தாங்கியை, தாங்கி நின்ற மண்ணெண்ணெய் பரல்கள் துருப்பிடித்து உக்கியதால், தண்ணீர்த் தாங்கி கீழே விழுந்து வெடித்துச் சிதறியது.

யாழ். போதனா வைத்திய சாலையில் சிறுவர் வார்ட்டின் தேவைக்காக பாவனையிலிருந்த தண்ணீர்த் தாங்கியே நேற்று முன்தினம் இவ்வாறு விழுந்து வெடித்துச் சிதறியது.

2 ஆயிரம் லீற்றர் தண்ணீர் கொள்ளக்கூடிய இத் தண்ணீர்த் தாங்கி சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

தாங்கியின் உயர அளவை அதிகரிக்கும் பொருட்டு கட்டடத்தின் மேல் மண்ணெண்ணெய் பரல்களை நிறுத்தி அதன் மேல்தண்ணீர்த்தாங்கி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒருவருடத்திற்கு மேலாக பாவனையில் இருந்த இந்தப் பரல்கள் துருப்பிடித்து உக்கியே தண்ணீர்த் தாங்கி சரிந்து விழுந்தது.

தண்ணீர்த் தாங்கி விழுந்த போது அதில் நிறைய நீர் நிரப்பப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)


### எழுதுவினைஞர் பதவிக்கான பயிற்சி வகுப்பு

புதிய பிரிவு
ஆரம்பம்:
18 - 10 - 97 (3 மணி)
ஆசிரியர்:
அ. குமாரவேல்
புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[49817]


# பல்கலைக்கழக இசைத்துறையில் நாதஸ்வரம் இடம்பெற வேண்டும்

## பாராட்டு விழாவில் கோரிக்கை

வலிகாமம் தெற்கு, ஒக். 16

''நாதஸ்வரக்கலை மக்களை மகிழ்விக்கும் கலையாக மட்டுமன்றி அறிவுக்கலையாகவும் மாற்றமடைய வேண்டும். பல்கலைக்கழக மட்டத்தில் இசைத்துறையில் நாதஸ்வரத்தையும் ஒரு பாடமாகக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும்.''

நாதஸ்வர வித்துவான் அளவெட்டி இ. கேதீஸ்வரனின் கலைச்சேவையைப் பாராட்டி நடைபெற்ற பாராட்டு விழாவில் வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மண்டபத்தில் இந்து மகாசபையினரின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு இராமநாதன் நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா தலைமை வகித்தார்.

பேராசிரியர் சண்முகதாஸ் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இசைக்கலையைப் பாராட்டும் மரபு எமது சமுதாயத்தில் நீண்டகாலமாக நிலவி வருகிறது. சைவசமயத்துக்கும், தமிழ் கலாசாரத்திற்கும் சேவையாற்றும் கலைஞர்கள் தாம் ஆற்றும் பணியை இறைவனுக்காற்றும் பணியாகக்கொள்கிறார்கள். நாதஸ்வரக் கலைஞர்கள் சபையில் இருந்து மக்களைக்கவர்வது போல அறிவுலகிலும் திகழ வேண்டும். கலைஞனுக்கு கம்பீரமும் அடக்கமும் தேவை. இவை இரண்டும் கேதீஸ்வரனிடம் காணப்படுகின்றன. நாதஸ்வரக்கலை அறிவுக்கலையாக ஒரு காலத்தில் வளரவாய்ப்பு உண்டு. அதற்கு கேதீஸ்வரன் போன்றோரின் பங்களிப்பு அவசியம் — என்றார்.

கலாநிதி சபா. ஜெயராசா தமது தலைமையுரையில் கூறியதாவது:-

கலைகளை வளர்க்கும் கிராமங்களின் பின்னணியில் தோன்றிய கேதீஸ்வரன் ஆற்றலும் அடக்கமும் கொண்டவர். உடற்பலப் பிரயோகம் கொண்டு கையாளப்படும் மிகக் கடினமான வாத்தியம் நாதஸ்வரம். கர்நாடக இசை, பண்ணிசை ஆகிய இரண்டையும் ஒன்று சேர்த்து நாதஸ்வரத்தில் வாசிக்கும் ஆற்றலுடையவர் கேதீஸ்வரன்.

யாழ். பல்கலைக்கழக நுண் கலைப்பீடத்துறையில்இசைக் கலைஞர்களது வாழ்க்கை வரலாறு, கலைக்கருவிகள் ஆகியவற்றைத் தொகுத்து ஓர் அருங் காட்சியகத்தில் வைக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். மருதனார் மடத்தில் இந்தியாவில் உள்ள கலாஷேத்திரத்தை ஒத்த மகாமண்டபத்தை அமைத்து வருகிறோம். அதன் ஒருபகுதியில இவ்வாறான கலைஞர்களின் வாத்தியங்கள் பேணப்பட்டுப் பெருமைப்படுத்தப்படும் — என்றார்.

மாவை. ஆதீனம் சு. து. ஷண்முகநாதகுருக்கள், தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா. மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

கலைஞர் கேதீஸ்வரனுக்கு இந்து மகாசபை சார்பாக ''ஸங்கீத நாதஸாகரம்'' என்ற பட்டம் வழங்கிபொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், சிவகாமி அம்மன் கோவில் சிவாச்சாரியார் ப. சோம. சபேசக் குருக்கள், பெ. கனகசபாபதி, செ. இலகுநாதன், சிவ [illegible] (ஐ-152)


# எம் நெஞ்சைவிட்டு அகலா பத்தாண்டு நினைவஞ்சலி

அமரர் நா. பாலசுப்பிரமணியம்
தாயின் மடியில்:- 12—05—1929

திருமதி நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம்
தாயின் மடியில்:- 16—07—1940
அரக்கர் பிடியில்:- 16—10—1987

அமைதி என்று வந்தவர்கள்
அநீதியாளர்களாக உருமாறி—உங்களை
மீளாத் துயில் கொள்ள வைத்து— எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்தினரோ?
''அப்பா அம்மா'' என ஏங்கும் நெஞ்சங்கள்
''அண்ணா அண்ணி'' என கதறும் நெஞ்சங்கள்
''அக்கா அத்தான்'' என உருகும் உள்ளங்கள்
இவர்களின் பரிதவிப்பினை ஆற்றுவோர்
பாரினில் யாருண்டு?

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரிகள்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (50576)

# யாழ். மாவட்ட புகைப்படப் பிடிப்பாளர்கள் சங்க அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

சங்கத்தினூடாக ஒவ்வொரு மாதமும் இருமுறை 10 ஆம், 25 ஆம் திகதிகளில் வர்ணப் படச்சுருள்கள் பிரதியாக்கம் செய்ய, கொழும்பிற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்

03, செட்டித்தெரு லேன்,
நல்லூர். [50575]

# கண்ணீர் அஞ்சலி

கந்தையா குலசேகரம்பிள்ளை
சமாதான நீதிவானும், எழுது மட்டுவாள்
விழுபளை கண்ணகை அம்பாள்
தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவரும்.

மேற்படி ஆலய திருப்பணித் தொண்டுகளில் இறுதிவரை அயராது உழைத்து தனது வாழ்நாளில் பெரும்பங்கை அம்பிகையின் திருப்பணிக்கே அர்ப்பணித்து அமரத்துவமெய்திய கந்தையா குல சேகரம் பிள்ளையவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்

(சி-1787)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உளநலத்துக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களில் 27 சத வீதமானோர் உளவடுக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகி உள்ளது. மற்றும் 65 சத வீதமானோர் ஏதோ ஒரு வகையான உளக்குழப்பத்தினால் தாக்கமுற்றவர்களே என்றும் வைத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

என்றுமில்லாதவாறு உளவடு உற்றோர் எண்ணிக்கை இந்த அளவுக்கு உயர்ந்திருப்பது மிகவும் அபாயகரமானது- இங்கு பெரும் சமூகவியல் தாக்கங்களை உருவாக்கி விடும்.

உளவடு உற்றோர் எண்ணிக்கை உயர்வதற்குப் போர்ச் சூழலே பிரதான காரணி என்பதனை எவரும் ஊகித்துக் கொள்ளலாம். எமது பத்திரிகையில் பேராசிரியர் தயா. சோமசுந்தரம் எழுதிய கட்டுரையில் இப்பிரச்சினை குறித்து விசாலமாகவும் விளக்கமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

போரினால் உண்டான உயிர், உடைமைச் சேதங்கள் மற்றும் இழப்புக்கள் ஒரு புறம். தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்களும், இன்னல்களும், இடர்களும் இரண்டாவது வகை, உளவடு நிலைமை மூன்றாவதாகச் சேர்ந்திருக்கின்றது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் உளவடுக்களுக்கு ஆளாகி இருக்கும் விவகாரம் முக்கிய கவனஞ் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தத் தாக்கத்தின் உடனடி விளைவுகள் இப்போதே தடுக்கப்படாவிட்டால், எதிர்காலச் சந்ததியும் நோயுற்றசமூகமாகவே மாறும்.

அத்தகைய ஆபத்து வராமல் தடுப்பதில் மிக முக்கிய கவனஞ் செலுத்தப்பட வேண்டும். உளவடுக்களினாலும், உளக்குழப்பங்களினாலும் ஏற்படும் விளைவுகள் குறித்தும்—

அவற்றைத் தடுப்பது, நீக்குவது குறித்தும்—

குடாநாட்டு மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்குவது அவசியம். உளவடுக்கள் உளநோயாக முற்றிப் பெரும் பாதிப்பைக் கொண்டு வராதிருக்க பாதிப்புற்றோரும், பாதிப்படையாதோரும் என்னென்ன வழிமுறைகளை, வாழ்க்கை முறைகளைப் பயிற்சிக்குக் கொண்டு வரலாம் என்பதனை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

மனவளம் குன்றுவதனால் விளையும் சமூகவியல் தாக்கத்தின் பரிமாணம் உணரப்பட வேண்டும் மக்களை உணரச் செய்ய வேண்டும். உளம் செம்மையாக இருந்தால், மனம் மாசு படியாதிருந்தால், உடல் நோய்கள் ஒருவனை அணுக மாட்டா என்ற எமது சமயங்களின் நெறிகள் பிழை போகாதவை என்பதனையும் உணர்த்த வேண்டும்.

உதயனில் வெளியான கட்டுரையை மனதூன்றிப் படித்தால், ஆய்வாழ நோக்குடன் படித்தால், ஒரு பெரிய உண்மையைப்புரிந்துகொள்ளலாம் எமது சமயங்கள் வகுத்த அல்லது போதித்த மனஒடுக்கம், பிரார்த்தனை, யோகாசனம், ஜெபம் போன்ற பயிற்சிகள் உளநலம் பேணுவதற்கான இலகு சிகிச்சை முறைகள் என்பதே அந்த உண்மையாகும்.

எனவே எம்மைச் சூழ்ந்துள்ள, மேலும் இருளடையச் செய்யக்கூடிய உளநலப் பாதிப்பைப் போக்குவதற்கு முன்னுரிமைத் திட்டங்கள் தேவை. புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் மனவளம் பேணும் அம்சமும் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், அவற்றின் திட்டமிடலாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளட்டும். சமய, சமூக நிறுவனங்களும் மக்களை, பிரார்த்தனை, பஜனை, யோகம் போன்ற பயிற்சிகளுக்கு மக்களை அழைத்துச் செல்லச் செயற்படட்டும்.

# அதிகாரப் பரவலாக்கல் யோசனை: நாடுதழுவிய சர்வஜன வாக்கெடுப்பு

### அரச நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

''அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளைநாடாளுமன்றத்தில் முன்வைக்க முன்னர் அது தொடர்பாக நாடு தழுவிய அளவில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்''

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை ஆளுநர் மற்றும் உறுப்பினர்களும் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனை தொடர்பாக அவர்களுக்கு விளக்குவதற்காக நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதை ஆதரித்தனர்.

(இ-21-3)

## பருத்தித்துறைக்கு மேலும் 3 பஸ்கள்

நெல்லியடி, ஒக். 16

பருத்தித்துறை டிப்போவுக்கு மேலும் மூன்று புதிய பஸ்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவிருக்கின்றன.

ஏற்கனவே இங்கு 8 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

[இ-109]

### ரெலோ முகாம் மீது

## படகுகள் மூலம் வந்தே புலிகள் தாக்குதல் நடத்தினர்

மட்டக்களப்பு, ஒக். 16

மட்டக்களப்பு ஆரையம்பதி உள் வீதியில் விசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகில் அமைந்துள்ள ரெலோ அலுவலகத்தை படுவான் கரையில் இருந்து 2 படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் அன்ரனி ராஜ்குமார் (17வயது), அழகுதுரை ஸ்ரீகாந்தன் (21வயது), சீவரத்தினம் ரவீந்திரகுமார் (26 வயது) ஆகியோர் உயிரிழந்ததாகவும்—

தேவநாயகம் சிவகுமார், கமால்டின் அன்பர், சீனித்தம்பி உதயராஜா ஆகியோர் காயமடைந்ததாவும்—

அங்கிருந்து ஜி3, ரி56, ரி80 ரக துப்பாக்கிகளை புலிகள் எடுத்துக் கொண்டு தப்பிவிட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(முன் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## உதைபந்நாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 16

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டங்கள் இன்று பிற்பகல் யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும்.

★ 3ஆம் பிரிவு — பிற்பகல் 3-00 மணி — முத்துத்தம்பி ம. வி. எதிர் கொக்குவில் இந்து.

★ 2ஆம் பிரிவு — பிற்பகல் 3-45 மணி — கனகரத்தினம் ம. வி. எதிர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்.

(இ-3)

## லேக்ஹவுஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

கரணங்களுக்கோ சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் — இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பான கேணல் தீபால் சுபசிங்க தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனப் பணிகள் இன்று வழமைக்குத் திரும்பும் என்றும்—

இன்று பத்திரிகைகள் வெளிவராது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

[இ-21-3]

## கொழும்பின்...

(முதலாம பக்கத் தொடர்)

அப்பொழுது கார் ஒன்று குறுக்கே நிறுத்தப்பட்டிருந்ததால் உலகவர்த்தக கட்டடத்துக்குள் செல்லும் முயற்சி கைகூடாது போகவே அந்த இடத்தில் வெடித்ததாகவும் —கூறப்படுகிறது.

அப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுடனேயே குண்டும் பாரிய சத்தத்துடன் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தை அடுத்து கொழும்பு கோட்டைப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. அப்பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

(இ-21-3)

## நாளை

**புரட்டாதி 31**

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை முற்பகல் 7.43 வரை. துதியை வைகறை 5-50 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி முற்பகல் 10.44 வரை.

சுபநேரம்: 6.02-7.32

ராகுகாலம்: 10.32-12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சாயி சிந்தனை

வீடுகளிலும் சரி, பாடசாலைகளிலும் சரி உள்ளத்தில் அமைதி காக்கும் பழக்கத்தை இளம் பராயத்தினருக்கு ஏற்படுத்த பெற்றோரும், ஆசிரியர்களும் ஆர்வங் கொள்ள வேண்டும். அந்தப் பணிக்குத் தகுதியாவதற்கு, முதலில் ஒழுங்கான தியானமும் நாமஸ்மரணைக்கும் இவர்கள் செய்து வருதல் அவசியம். காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குறிப்பிட்ட அளவு நேரத்தை நாமஸ்மரணைக்கும், ஆன்மீக நூற் பயிற்சிக்கும் ஒதுக்க வேண்டும். பெற்றோரும் பிள்ளைகளுமாகச் சேர்ந்து இறைவனின் மகிமையைப் பாடித் துதிக்க வேண்டும்.

உண்மையில் ஒருத்தரின் நேரம் அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதே வேண்டுவதாகும். அதற்கு முதற்படியாக சொற்ப நேரம் அவன் மகிமையைப் போற்றிப் புகழவும், ஆழ்ந்து சிந்திக்கவும் செலவிடப்படலாம்; படிப்படியாக இது பழக்கத்தில் வரும்போது இனிய சுகம் பிறக்கும்; உற்சாகம் கூடும். நேரத்தை இன்னும் அதிகமாக நீடிப்பீர்கள். உள்ளம் மேன்மேலும் நிறைவடையும்.

'வாழ்வு' என்பதன் நோக்கம் 'இறைமயமான வாழ்க்கையை' எய்துவதே யாகும். இவ்விதமாக மேன்மையடைந்து பூரண மெய்துவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு நீங்கள் சத்தியத்தின் சொரூபம். அதிலே நம்பிக்கை இழக்கவேண்டாம். உங்களைச் சிறுமைப்படுத்த வேண்டாம்.

மனிதத் தன்மையிலிருந்து மிருகத்தன்மைக்கும் அதற்குக் கீழாகவும் நீங்கள் எப்படியும் அடிக்கடி வழுவினாலும் உங்கள் சொரூபம் தெய்வீகமே!

ஆதாரம்: Sathya Sai speaks Vol. VI

# சமாதானத்தை நிலைநாட்டும் உறுதியைதடுத்துவிடமுடியாது

### குண்டு வெடிப்பு குறித்து ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 16

''நாட்டில் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் எதிரான சக்திகள் கொழும்பு குண்டுவெடிப்பின் பின்னணியில் இருந்திருக்கின்றன'' இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் இறுதிக் கட்டத்தில் இத்தகைய செயல் இடம்பெற்றமை குறித்து ஜனாதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இத்தகைய வன்செயல்களால் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைத் தடுத்துவிட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## பங்குச்சந்தை இன்றுகூடாது

இலங்கைக்கு பெருவருவாயைத் தேடித்தரும் பங்குச்சந்தை இன்று கூடமாட்டாது என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

உலக வர்த்தகமையக்கட்டடத்தில் அமைந்திருந்த தபால், தந்தி தொலைத்தொடர்பு அமைச்சு அலுவலகம், பங்குச்சந்தை அலுவலகம் ஆகியன சேதமடைந்துள்ளன.

(இ-21-3)

## கோட்டை பகுதிசுற்றிவளைப்பு

கொழும்பு, ஒக். 16

கொழும்பில் நேற்றுக காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கு சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் தற்போது சம்பவம் நடந்த இடத்தில் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு அருகில் உள்ள சகல கட்டடங்களும், ஹோட்டல்களும் படையினரால் சோதனையிடப்பட்டன என்றும் —

தற்போது அவற்றில் ஆபத்து எதுவும் இல்லை என்றும் — தீயணைக்கும் படையினர் தெரிவித்துள்ளனர். எந்தவித அவசர நிலைமையையும் எதிர்கொள்ளும் வகையில் விசேட தீயணைப்புப் படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

(இ-5)

## குண்டுக்கு தேரரும் பலி!

கொழும்பு, ஒக். 16

கொழும்பு கோட்டையில் உள்ள தம்புபாலோக விகாரையின் பிரதமகுரு விஹாரன்தெனிய தேரரும் (வயது 79) நேற்று இடம்பெற்றகுண்டு வெடிப்புச் சம்பவத்தின்போது கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சம்பவத்தின்போது இந்த விகாரையும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(இ-5)

## குண்டு வெடித்த இடத்தில் குழி

கொழும்பு, ஒக். 16

நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் உலக வர்த்தக மையத்துக்குப் பின்புறமாகவுள்ள கலதாரி ஹோட்டல் வாகனத் தரிப்பிடத்தில் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இத்தாக்குதல் குறித்து பி. பி. ஸி. தெரிவித்ததாவது:

குண்டு வெடிப்புச் சத்தம் கொழும்பு நகரைக் கடந்து எதிரொலித்தது. அதனைத் தொடர்ந்து பிரதான ஹோட்டலில் இருந்து அலையலையாகப் புகை எழுந்தது.

உலக வர்த்தக மையத்தின் மிகவும் தனிச் சிறப்புமிக்க கட்டடத்துக்கு அண்மையில் உள்ள ஹோட்டல் வாகனத் தரிப்பு நிலையத்தில் இக்குண்டு மிகப்பெரிய குழி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் இன்னமும் எஞ்சியுள்ளன. எனினும் அவற்றின் கண்ணாடிச் சாளரங்கள் நொருங்கியுள்ளன. வாகனத் தரிப்பு நிலையத்தில் குப்பைகளும் உலோகத் துண்டுகளும் பரவிக் கிடக்கின்றன.

ஒரு பயங்கரவாத இயக்கமாக அமெரிக்காவால் கடந்த வாரம் பிரகடனம் செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தான் இத் தாக்குதலை நடத்தியிருப்பதற்கான எல்லா அறிகுறிகளும் தென்படுவதாக பொலீஸார் கூறியுள்ளனர்.

இப்படி பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

(இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா குலசேகரம்பிள்ளை

(எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாழை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா குலசேகரம்பிள்ளை (முன்னாள் முகமாலை, மிருசுவில் கிராமசபைத் தலைவரும், சமாதான நீதிவானும், அரசாங்க மரக் கூட்டுத்தாபன ஒப்பந்தகாரரும், முன்னாள் விழுபளைக் கண்ணகை அம்மன் பரிபாலன சபைத் தலைவரும்) அவர்கள் 14-10-97 செவ்வாய்க்கிழமை சிவபாதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னத்தங்கம் (முகமாலை) தம்பதிகளின் அருந்தவப் புதல்வரும், நாகம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர், வவுனியா), தம்பிராசா, நடராசா (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை), பேரம்பலம் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி), பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், முத்துத்தம்பியின் (அல்வாய்) அன்பு மைத்துனரும், சிவபாக்கியம், சிவராசா (கனடா), அன்னலட்சுமி, சிவரத்தினம், இந்திராணி (ஆசிரியை, முகமாலை றோ. க. த. க. பாடசாலை), சிவராணி, சிவானந்தம், சிவாகரன் (கனடா), சிவரூபன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராஜா (அதிபர், யா/உசன் இராமநாதன் ம. வி.), குகாம்பிகை (கனடா), வேதாரணியம் (ஓய்வு பெற்ற அஞ்சலதிபர்), நவரத்தினராசா (கிராம சேவை அலுவலர், எழுதுமட்டுவாழ்), சாந்தநாயகிஅம்மா, தெய்வேந்திரம், நவமணிதேவி (உப அஞ்சலதிபர், எழுதுமட்டுவாழ்), அருணா (கொழும்பு), சௌரி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகா, வைகுந்தன், யசித்தா, கஜீபன், அனுஜா, கோபு, சுதாரணி, சுயாத்தா, சுஜீவன், கோவர்த்தனன், சரண்ஜா, துசாந்தி, கோபிநாத், கோபிராஜ், துவாரகன், துதீதன், துயாணன், மதிமுகன், பிரியந் ஆகியோரின் அன்புப் பேரனும், சிந்துகன், கஜானன், தனுஜன், சஞ்சீவ், யஸ்வந் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-10-97 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, சகோதரர்கள்,
பிள்ளைகள், மருமக்கள்.

''பழமுதிர் சோலை'',
நாகர் கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ். (50565)

## சின்னப்பு நடராசா

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தம்பாலையைச் சேர்ந்தவரும் தற்போது உடுப்பிட்டியில் வசித்தவருமாகிய சின்னப்பு நடராசா 10-10-97 இல் சிவபாதமடைந்தார்.

இவர் அராலி சின்னப்பு சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் அற்புதராசா (ராசு கரன் கைத்தொழிலகம், உடுப்பிட்டி), முத்துராசா (கனடா), யோகேஸ்வரன், விக்னேஸ்வரன் (அப்பன்), மீனலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதேவி, மாலதி, இரத்தினகுமாரி, பத்மினி, வைரவநாதன் (இந்தியன் ஓவசியஸ் வங்கி, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-10-97 இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

அல்வாய் வீதி,
உடுப்பிட்டி. (50569)

## கணபதிப்பிள்ளை அருணாசலம்

(முன்னாள் ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கல்வயலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அருணாசலம் 13-10-97 திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும், ஆனந்தகணேசன் (பொறியியலாளர்), ஞானகணேசன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபோதினியின் பாசமிகு மாமனாரும், பண்டிதர் க. வேலுப்பிள்ளை (ஆசிரியர்), க. சங்கரப்பிள்ளை (ஆசிரியர்), காலஞ்சென்ற க. நடராசா (இலிகிதர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-10-97 வியாழக்கிழமை பி. ப 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஞானகணேசன்
(மகன்)

கல்வயல்,
சாவகச்சேரி. (50572)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-10-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மீன் பிடிக் கட்டுப்பாட்டை எதிர்த்து

# பாஷையூர் மீனவர்கள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஒக். 16

கடந்த ஒரு வார காலமாக கடலில் மீன் பிடிக்க இராணுவத்தினர் அனுமதி மறுத்ததைக் கண்டித்து பாஷையூர் கடற்றொழிலாளர்கள் நேற்றுக் காலை ஊர்வலமாகப் புறப்பட்டு யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. பணிமனைக்குச் சென்றனர்.

அங்கு ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து அவர்கள் இது தொடர்பாகத் தெரிவித்தனர் என்றும் —

இதனைத் தொடர்ந்து டக்ளஸ் தேவானந்தா யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனையும், 512 ஆவது பிரிகேட் இராணுவ அதிகாரி சுசந்த மெண்டிஸையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார் என்றும் —

அதிகாலை 5மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மீன் பிடிப்பதற்கு அவர் அனுமதி பெற்றுக் கொடுத்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## குளம் புனரமைப்பு

அச்சுவேலி, ஒக். 16

அச்சுவேலி தெற்கு மருதங்குளம் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை நிலையத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளனத்தின் உறுப்பினர்கள் இச்சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

(ஐ-11)

## பயண கொடுப்பனவு இல்லை

திருநெல்வேலி, ஒக். 16

யாழ். சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றி வரும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவுகள் கடந்த பல மாத காலமாக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இதற்கான நிதியை இதுவரை இங்கு அனுப்பி வைக்கவில்லை என்று அறிய வருகிறது. (ஐ-135)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் ஒக். 16

ஏழாலை தெற்கு அ. மி. த. க பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் சனியன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் மு. செல்வஸ் தான் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-15)

எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

Dr. ராஜசேகர் நடித்த
★ இதுதாண்டா உலகம்

Dr. ராஜசேகர், ஜீவிதா
★ இதுதாண்டா போலீஸ்

கார்த்திக், கனகா
★ கட்டப் பஞ்சாயத்து

சரத்குமார், மீனா
★ நாடோடி மன்னன்

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/1790)

## அம்பலவாணரின் மறைவுக்கு புளொட் அமைப்பு இரங்கல்

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர் அதி வண. டி. ஜே. அம்பலவாணரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ''புளொட்'' அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பேராயர் அமரர் டி. ஜே அம்பலவாணர் அவர்கள் கிறிஸ்தவ மதத்தின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக தெளிவான சிந்தனையுடனும் மதிநுட்பத்துடனும் உழைத்து வந்த பெருமகனாவார். அத்தோடு கல்வி வளர்ச்சிக்காகவும் ஆதரவின்றி எதிர்கால வாழ்வுக்காக ஏங்கித் தவிக்கும் பிஞ்சுகளை அன்புள்ளத்துடன் அரவணைத்து சிறுவர் இல்லங்கள் அமைத்து நல்வாழ்வு கொடுத்து வந்தார்.

எங்கெங்கு எம் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் தளராது நின்று நீதிக்காக குரல் கொடுத்து வந்த பெருந்தகை.

யுத்த அனர்த்தங்களினால் எம் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக அல்லல்பட்டு ஓடிய வேளையில் அரவணைத்து ஆறுதல் அளித்து வந்த பேராயர் அமரர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் இழப்பு கிறிஸ்தவ சமூகத்துக்கு மட்டுமல்ல முழுத் தமிழ் சமூகத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அமரர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களுக்கு எமது அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா குலசேகரம்பிள்ளை J. P.

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எழுதுமட்டுவாழ் வர்த்தகர் சங்கம்,
எழுதுமட்டுவாழ்.

(சி/1789)

## கண்ணீர் அஞ்சலி

### பேராயர் கலாநிதி D. J. அம்பலவாணர்

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய முன்னாள் பேராயர் கலாநிதி D. J. அம்பலவாணர் அவர்களின் மறைவை அறிந்து பெரும் வேதனை அடைகின்றோம்.

அன்னாரின் மறைவினாற் துயருறும் பேராயரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புங்குடுதீவு தென் இந்திய திருச்சபை,
புங்குடுதீவு.

(சி/1791)

## மரண அறிவித்தல்

### நீக்லஸ் ஞானப்பிரகாசம்

பலாலி தெற்கு, வயாவிளானைச் சேர்ந்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான நீக்லஸ் ஞானப்பிரகாசம் 15-10-1997 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நீக்லஸ் சலோமை ஆகியோரின் அன்பு மகனும், மேரி ஜோசேப்பின் அவர்களின் அன்புக் கணவரும், யூடிற்றா, கொண்சேக்கா, திரேசா (திருகோணமலை), அன்ரன் (பிரான்ஸ்), சிசிலியா (பிரான்ஸ்), காலஞ்சென்ற கொலஸ்ரிக்கா, மற்றும் காமலீற்றா, குணசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரியகுட்டி, செல்வராஜா, ரவீந்திரன், மரியநாயகம் (பிரான்ஸ்), குலேந்திரன் (சவூதி), றெஜினா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடலானது இன்று (16-10-97) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஞா. குணசீலன்
(மகன்)

99/6, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (50577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org